**செய்தி வெளியீடு எண்: 718** **நாள்:24.10.2019**

**இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதித்துறை இயக்குநரகம், சென்னை–106.**

பி.என்.ஒய் .எஸ் மருத்துவ பட்டப் படிப்பினை வழங்கிடும் ஒரு அரசு மற்றும் ஒன்பது சுயநிதி மருத்துவக் கல்லூரிகளிலுள்ள காலி இடங்களுக்கு 2 கட்டங்களாக நடைபெற்ற கலந்தாய்வின் மூலம் 2019/ 20ன் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கை மூலம் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டுவிட்டு, 160 இடங்கள் மட்டும் காலியாக உள்ளன. இந்த இடங்களை நிரப்ப வேண்டி சென்னை/ 106, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநரகத்தில் அமைந்துள்ள தேர்விக் குழு அலுவலகத்தில் 29.10.2019 அன்று நண்பகல் 3.00 மணியளவில் உடனடி கலந்தாய்வு கீழ்க்கண்ட அட்டவணை காலியிடங்களுக்கு நடைபெற உள்ளது,

| வ. எண். | கல்லூரியின் பெயர் | OC | BC | BCM | MBC /DC | SC | SCA | ST | கல்லூரி வாரியாக மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | JSS Institute of Naturopathy and Yogic Science, Coimbatore. | 0 | 0 | 0 | 0 | 2 | 0 | 1 | 3 |
| 2 | Sree Ramakrishna Medical College of Naturopathy and Yogic Sciences, Kulasekharam, Kanyakumari Dist. | 0 | 0 | 0 | 2 | 3 | 0 | 1 | 6 |
| 3 | Sivaraj Naturopathy & Yoga Medical College, Salem | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | SVS Medical College of Yoga and Naturopathy and Research Institute, Kallakkurichi. | 0 | 7 | 0 | 5 | 5 | 1 | 0 | 18 |
| 5 | Nandha Naturopathy and Yoga Medical College, Erode. | 0 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 2 |
| 6 | Annai College of Naturopathy and Yoga Science, Kumbakonam. | 0 | 4 | 0 | 1 | 1 | 0 | 0 | 6 |
| 7 | Excel Medical College for Naturopathy & Yoga, Namakkal. | 0 | 8 | 0 | 3 | 2 | 0 | 0 | 13 |
| 8 | Krishna Yoga Naturopathy Medical College, Trichy | 0 | 12 | 0 | 3 | 1 | 1 | 1 | 18 |
| 9 | Mother Terasa Yoga & Naturopathy Medical College, Pudukkottai | 25 | 27 | 3 | 20 | 15 | 3 | 1 | 94 |
| | **இன வாரியாக மொத்தம்** | **25** | **58** | **3** | **36** | **29** | **5** | **4** | **160** |

கடந்த 2 கட்டங்களாக நடைபெற்ற கலந்தாய்வில் வருகைபுரியாதவர்கள், தாமதமாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள், முன்னர் நடைபெற்ற கலந்தாய்விற்கு விண்ணப்பிக்க தவறியவர்கள் போன்றோர் இந்த உடனடி கலந்தாய்வில் கலந்து கொள்ள புதிதாக எங்களது அலுவல் வலைதளமான **www.tnhealth.org** ல் இப்படிப்பிற்கான உரிய

விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, கேட்பு வரைவோலை மூலமாக ( கேட்பு வரைவோலை பற்றிய கூடுதல் விரங்களுக்கு எங்களது வலைதளத்தை காணவும் ) **செலுத்தி கண்டிப்பாக நேரடியாக மட்டும்** வருகின்ற 29.10.2019 அன்று முற்பகல் 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிக்குள்ளாக சமர்ப்பித்தல் வேண்டும். நண்பகல் 12.00 மணிக்கு மேல் பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் பெறப்பட மாட்டாது,

பொது தர வரிசை பட்டியல் அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணியளவிலேயே வெளியிடப்பட்டு, அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணியளவில் கலந்தாய்வு நடைபெறும். இக்கலந்தாய்வில் இட ஒதுக்கீட்டு ஆணைகள் பொது தர வரிசை பட்டியல் அடிப்படையிலும், இன சுழற்சி முறையிலும் நடைபெறும். மேலும் வரிசை 2019-20 ஆம் கல்வியாண்டு பி.என்,ஒய் .எஸ் மருத்துவ பட்டப் படிப்பிற்கான தகவல் தொகுப்பேட்டில் காணப்படும் அனைத்து உரிய விதிகளும் இக்கலந்தாய்விற்குப் பொருந்தும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கலந்தாய்வு கட்டணம் மற்றும் கல்வி கட்டணத்திற்கென 2 கேட்பு வரைவோலைகளை ( கேட்பு வரைவோலை பற்றிய கூடுதல் விவரங்களுக்கு எங்களது வலைதளத்தை காணவும் ) தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களையும் அல்லது தற்போது படித்து வரும் கல்லாரியிலிருந்து பெறப்பட்ட ஆளறி சான்றிதழினை சமர்ப்பித்து கலந்து கொள்ளலாம். மேலும் இக்கலந்தாய்வில் கலந்து கொண்டு இட ஒதுக்கீட்டு ஆணை பெறுபவர்கள் கண்டிப்பாக 31.10.2019 மாலை 5.00 மணிக்குள்ளாக இடஒதுக்கீடு செய்யப்பட்ட கல்லுாரியில் இணைதல் வேண்டும்.

**இயக்குநர்,**
**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**